மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

272—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***7079 திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஏழு கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கும் தாயாக, தலைவராக இன்றைக்குத் தமிழகத்திலே பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) பாரதத்தினுடைய வருங்கால பிரதமர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியால் தமிழகத்தை இந்தியாவிலேயே வேளாண்மைத் துறையில் முதன்மை மாநிலமாக உருவாக்கி, உலக சாதனை படைத்த காவேரித் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

2013 ஏப்ரல் 19]

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உப்பிடமங்கலத்தில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க, அப்பகுதி விவசாயப் பொது மக்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலத்தில் 7 கி.மீ. தொலைவில் கரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 15 கி.மீ. தொலைவில் இரும்பூதிபட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் மற்றும் 25 கி.மீ. தொலைவில் குளித்தலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் செயல்பட்டு வருகிறது. உப்பிடமங்கலத்தில் பயிர் சாகுபடி செய்யப்படும் பரப்பளவு மிகவும் குறைவாகவே உள்ளது. அதனால் தனியாக உப்பிடமங்கலத்திற்கென ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, உப்பிடமங்கல பகுதி விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கரூர், இரும்பூதிபட்டி, குளித்தலை ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

திரு. செ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடியேனின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆய்வுப் பணி செய்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]